திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்ட விரோத ஆக்கிரமிப்பால் அங்கு பயிர் செய்கின்ற விவசாயிகளுக்கு மிகவும் பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது என்று அவர்கள் ஒவ்வொரு ஜமா பந்தியிலும் மனுக்கள் கொடுத்திருக்கிறார்கள். அந்த ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கிறோம் என்று அதிகாரிகளும் உறுதிமொழி கொடுத்திருக்கிறார்கள். அந்த உறுதிமொழியினை அவர்கள் காப்பாற்றவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? இந்த சட்ட விரோத ஆக்கிரமிப்பால் சுமார் 2,000 ஏக்கர் அளவுக்கு விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவரவர்களே, மதுராந்தகம் ஏரியின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஆயக்கட்டுகள் சுமார் 3,000 ஏக்கர். ஏரியின் நீர்ப்பிடிப்பு புறம்போக்கு நிலங்களில் 129.69 ஏக்கர் நிலங்களில் 246 ஆக்கிரமிப்புக்காரர்கள் பயிர் செய்யும் சூழ்நிலை இருந்து வருகிறது. அவர்களை வெளியேற்ற அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவரவர்களே, இந்த சட்ட விரோத ஆக்கிரமிப்பு குறித்து நடவடிக்கை எடுப்பதற்கான செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா? மேலும் மதுராந்தகம் ஏரி, அங்குள்ள பாசனத்திற்கு மிகவும் முக்கியமான ஏரியாகும். இந்த ஏரி பல்லாண்டு காலமாக பழுது பார்க்கப்படாமல் இருக்கிறது. 1969-ஆம் ஆண்டு வறட்சி ஏற்பட்டபோது அன்றைய தினம் பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களை அந்த ஏரிக்கே அழைத்து வந்தார்கள். ஆனால் அந்த ஏரியானது செப்பனிடப்படாமல் இருக்கின்றது. ஆகவே இனி மேலாவது அதைச் செப்பனிடும் பணி மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்துக்களை அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ராஜசிங்கமங்கலம் கண்மாய்

*வினா எண். 519 — திரு. செ. சிவசாமி : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சுமார் 12 ஆயிரம் ஏக்கர் பாசன வினியோகத்திற்கான ராஜசிங்கமங்கலம் கண்மாய் வைகை ஆயக்கட்டு நீர்ப் பாசன திட்டத்துடன் சேராமல் இருப்பது அரசுக்குத்தெரியுமா?

1981 மார்ச் 27]

(ஆ) ஆம் எனில் தற்போது சேர்த்துக் கொள்ள அரசிடம் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) மற்றும் (ஆ); வைகை கால்வாய் சீரமைப்புத் திட்டம் (Modernising Vagai Channel Scheme) முழு அளவில்செயல்பட இன்னும் மூன்று ஆண்டுகள் பிடிக்கும். அதன் பிறகு ஐந்து ஆண்டுகள் இத்திட்டம் செயல் படும் விதம் மற்றும் பயன்களை பரிசீலித்த பின்னரே ஆர். எஸ். மங்கலம் கண்மாயை வைகை கால்வாய் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் சேர்ப்பது பற்றி பரிசீலிக்க முடியும் என்று சிறு பாசனத் தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

திரு செ. சிவசாமி: தலைவரவர்களே, ஆர். எஸ். மங்கலம் கண்மாய் 12,140 ஏக்கருக்கு தண்ணீர் கொடுக்கக்கூடிய மிகப் பெரிய கண்மாய். அந்தக் கண்மாய்க்கு அப்பர் நாட்டான் கால்வாய், லோயர் நாட்டான் கால்வாய் ஆகிய இரண்டு கால் வாய்களிலும் வைகையிலிருந்து தண்ணீர் விடுவது இன்று நிறுத்திப் பட்டிருக்கின்றது. ராமநாதபுரம் எஸ்டேட் காலத்திலிருந்து தொடர்ச்சியாக ஆர். எஸ். மங்கலம்கண்மாய்க்கு வைகையிலி ருந்து தண்ணீர் வந்து கொண்டிருந்தது. ஆனால் தற்போது ** ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தண்ணீர் ஒவ்வொரு பக்கம் போவதற்கும் ஒவ்வொரு விளக்கம் தந்து கொண்டு இருக்க முடியாது. சுருக்கமாகக் கேட்கவேண்டும், கடைசியாக அவர் ** ** ** என்று குறிப்பிட்டதை நீக்கும்படி உத்தரவு இடுகிறேன்.

திரு செ. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைகை சீரமைப்புத்திட்டத்திலே உடனடியாக அதைச் சேர்த்துக் கொள்ள அரசு ஏற்பாடுசெய்யுமா என்று தெரிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல, மேல் நாட்டான், கீழ் நாட்டான் ஆகிய இரண்டு நீர் வரத்து கால்வாய்கள் மூலமாக வைகையில் உபரி நீர் இருக்கும் போது ஆர். எஸ். மங்கலத்திற்கு நீர் சென்று

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கொண்டிருக்கிறது. உபரி நீர் இல்லாத காலங்களில் நீர் விடப் படுவது இல்லை. இதனால் சீரமைப்புத் திட்டம் முழுவதுமாக முடிந்த பிறகு, எவ்வளவு உபரி நீர் கிடைக்குமோ அதை வைத்துக் கொண்டுதான் இந்தத் திட்டம் போட முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு செ. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வாரம் நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் சூறாவளி சுற்றுப் பயணம் செய்தபோது இந்தக் கண்மாய்களை நேரிடையாகப் பார்த்து, அவற்றை சீரமைக்கும் பணிகளை உடனடியாக செய்ய வேண்டும் என்று அந்த இடத்திலேயே சொன்னார்கள். ஆகவே, உடனடியாக வறட்சிப் பணிகளின் திட்டத்தின் கீழ் அந்தக் கண்மாய்களை சீரமைக்கும் பணிகளை மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவர் அவர்களே, 1977 மற்றும் 1979 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் அந்தக் கால்வாய்கள் சேதம் அடைந்தன. அதை உடனடியாக திருத்தி அமைத்து, ஆழப்படுத்தி, கரைகளை வெட்டி சீர் செய்வது போன்ற பணிகள் மேற்கொள்ள முடிவெடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இந்தப் பணிகள் முடிவடைந்தாலே, தண்ணீர் கிடைத்து விடும், கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது சரியல்ல. வைகையில் உபரி நீர் இருந்தால் தான் அங்கே தண்ணீர் கிடைக்கும். ஆகவே வைகை சீரமைப்புத் திட்டம் முழுமையாக நிறைவேற்றப் பெற்ற பிறகே, கிடைக்கும் உபரி நீரை கருத்தில் கொண்டு, தண்ணீர் விட ஏற்பாடு செய்வதற்கான வழி முறைகள் ஆராயப்படும்.

திரு உ. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, வைகை பெரியார் சீரமைப்புத் திட்டம் உலக வங்கியின் உதவியுடன் நடத்தப் பெறுகிறது. அதற்கு ஏற்கனவே திட்டம் இடப்பட்டு ஒரு பகுதி வேலை நடந்து வருகிறது என்பது அனைவரும் அறிந்த ஒன்று. மாண்புமிகு உறுப்பினர், நண்பர் சிவசாமி அவர்கள் கேட்கிற மாதிரி, அந்த ஆர். எஸ். மங்கலம் கால்வாயை: வைகை சீரமைப்புத் திட்டத்தில் சேர்ப்பதற்கு உலக வங்கியுடன் பேச்சு வார்த்தை நடத்தப் பெறவில்லையா? இல்லையென்றால் இனிமேலாவது அப்படி நடத்தி அங்கே தண்ணீர் விடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே நிதி பிரச்னை என்பதே இல்லை. இப்போது வைகையில் கிடைக்கும் உபரி நீர்தான் அந்தக் கால்வாய்கள் வழியாக அனுப்பப் பெறுகிறது. உபரி நீர் கிடைக்காத காலத்தில் அனுப்பப்பெறுவது இல்லை. வைகை

1981 மார்ச் 27]

சீரமைப்புத் திட்டம் முழுமையாக நிறைவேற்றப் பெற்ற பிறகு, மூன்று ஆண்டுகள் கழித்துதான், உபரி நீர் எவ்வளவு கிடைக்கும் என்று பார்த்து, அந்தக் கால்வாய்களின் வழியாக விடுவதற்கு ஏற்பாடு செய்யப் பெறும். அப்படி அந்த திட்டத்தை எடுத்துக் கொள்ளும்போது வேண்டுமானால், நிதிப் பிரச்னை எழுந்தால் உலக வங்கியுடன் பேசியோ அல்லது நம் நிதியிலிருந்தே நிதியை ஒதுக்கியோ திட்டத்தை நிறைவேற்று வதற்குப் பரிசீலனை செய்யலாம்.

திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரத்திற்கு அருகில் உள்ள சர்க்கரை மடை கண்மாயை, வைகை சீரமைப்புத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று நீண்டநாள் கோரிக்கை இருந்தது. அது நிறைவேற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை).

திருச்செந்தூர் தொகுதியிலுள்ள இந்திரா கெமிக்கல்ஸ் நிறுவனம்

*வினா எண். 520—திரு. திரு. சி. கேசவ ஆதித்தன் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருச்செந்தூர் தொகுதியில் வீரபாண்டியன் பட்டினம், காயல் பட்டினம் இரண்டிற்கும் இடையே உள்ள சிண்டிகேட் பாங்கினால் பெரு முதலீடு செய்யப்பட்டு தற்சமயம் மூடி இருக்கும் இந்திரா கெமிக்கல்சை திறக்க அரசாங்கம் ஏதாவது முயற்சி எடுத்துள்ளதா ?

(ஆ) இல்லை எனில் இனியாவது எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :

(அ) மற்றும் (ஆ) : இந்திரா கெமிக்கல்ஸ் என்ற நிறுவனம் ஒரு பதிவு பெற்ற சிறிய தொழில் அல்ல. இருப்பினும், தொழில் வணிக இயக்குநரகம் எழுதிய பல கடிதங்களுக்கு மேற்படி இந்திரா கெமிக்கல்ஸ் என்ற நிர்வாகத்தின் பங்குதாரர்களிடமிருந்து யாதொரு பதிலும் கிடைக்கப்பெறவில்லை. ஆகையால் அதன் புனர்வாழ்வுக்கான மேல் நடவடிக்கைகள் கூட எடுக்கப்பட முடியவில்லை.